

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் பொதுச் செயலாளர் ராஜசேகர், பொருளாளர் சிவசுப்ரமணியம், இணைப் பொருளாளர் குணசேகரன் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைசெயலாளர்வே.ராஜாராமன்மற்றும்தமிழ்வளர்ச்சித்துறைஇயக்குநர்முனைவர்ந.அருள்ஆகியோர்உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த அவசர செயற்குழு கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பேசினார். மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஆர்.விநோத்காந்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட துணை செயலாளர்கள் சிவானந்தம், துரை மஸ்தான், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், அ.அசோகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### குன்றக்குடி அடிகளார் சிறப்புரை! காரைக்குடியில் வீரமுடியரசனார் ஐம்பெரும் விழா

# தமிழ் மொழிக்காக பாடுபட்டு உயிர்நீத்தவர்களை வருங்கால சந்ததியினர் தெரிந்து கொள்வீர்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, பிப்.19-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ் பண்பாட்டு மையம்,வீறு கவியரசர் முடியரசனார் அவைக்களம் இணைந்து வீறு கவியரசர் முடியரசனார் சிலைக்கு அடிக்கல் நாட்டியதற்காகவும், அழகப்பா பல்கலைகழகத்தில் ஒரு அரங்கிற்கு வீறு கவியரசர் முடியரசனார் அரங்கம் என்று பெயர் சூட்டியமைக்கும், முதல்வர் தளபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் இதற்கு துணை நின்ற பேராசிரியர் கர்ணல் க.ரவி அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா, வீறுகவியரசர் முடியரசனார் அவைக்களம் வெள்ளிவிழா வீறுகவியரசர் முடியரசனார் பரிசுகள் வழங்கும் விழா வீறு கவியரசர் முடியரசன் அவைக்களம் நூல் வெளியீட்டு விழா ஆகிய ஐம்பெரும் விழா பல்கலைக்கழக துணைவேந்தர் கர்ணல் பேராசிரியர் க.ரவி தலைமையில் முன்னாள் அமைச்சர் வீறு கவியரசர் முடியரசனார் அவைக்களம் முதல் தலைவர், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சா. மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. வீறு கவியரசர் முடியரசனார் அவைக்கள நிறுவனர் எழுத்தாளர் பாரி முடியரசன் வரவேற்று பேசினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீறு கவியரசர் முடியரசனார் அவைக்களம் புரவலர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் தொடக்க உரை நிகழ்த்தினார் . இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டினை முன்னிட்டு அடிகளார் படத்தினை திறந்து வைத்தும்,பள்ளி மாணவி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கியும், வீறு கவியரசர் முடியரசனார் அவைக்களம் நூலினை வெளியிட்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசியதாவது. 25ஆண்டுகளுக்கு முன் தலைவர் கலைஞர் அவர்கள் வீறு கவியரசர் முடியரசன் அவைக்களத்தினை முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் துவக்கி வைத்து முடியரசனாரை பாராட்டினார். வீறு கவியரசர் முடியரசன் அவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் ஆகியோரால் பாராட்டு பெற்றவர்.அவர்களது அன்பை பெற்றவர்.



வீறு கவியரசர்முடியரசனார் மீது தலைவர் கலைஞர் அவர்கள் தனி அன்பினை வைத்திருந்தார். அதனால் அவருக்கு பெருமைசேர்த்திடும் வகையில் காரைக்குடி நகராட்சி அலுவலகம் அமைந்துள்ள சாலைக்கு முடியரசனார் வீதி என்று பெயரினை சூட்டியுள்ளார். அவரது நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டது. அவரது குடும்பத்திற்கு நிதியும் வழங்கப்பட்டது. இத்தகைய பல்வேறு சிறப்புக்குரியவர் முடியரசனார் ஆவார். அவருக்கு பல்வேறு சிறப்புகளை தலைவர் கலைஞர் அவர்கள் செய்தார்கள். இங்கு தற்பொழுது ரூபாய் 50 லட்சம் செலவில் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் ரூபாய் 50லட்சத்தில் சிலை தயாரிக்கப்பட்டு வருகிறது. இங்கு மணிமண்டபம் கட்டபப்படவேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. இது குறித்து முதல்வர் அவர்களிடம் தெரிவித்து கோரிக்கை நிறைவேற்ற என்னால் இயன்ற முயற்சியை எடுப்பேன் என்று உறுதி கூறுகிறேன். வீர கவியரசர் முடியரசன் அவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ,ஆகியோரால் பாராட்டு பெற்றவர். தலைவர் கலைஞரின் உள்ளத்தில் இடம்பெற்றவர் . தமிழ் மொழிக்காக ,தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழியை காப்பதற்காக பாடுபட்டு உயிர் நீத்த வீரர்களை இந்த அரசு கௌரவித்து வருகிறது . இதன் மூலம் மொழி, இனத்திற்காக உயிர் நீத்த வர்களை இன்றைய இளைஞர்கள் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைகிறது . ஒரு நாட்டின் மொழிக்காக ,இனத்திற்காக,மொழியை பாதுகாத்திட எத்தகைய தியாகசெயல்களில் அவர்கள் எவ்வாறு பாடுபட்டார்கள் என்று தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமையும். இது போன்று தமிழ் இனம் மொழிக்காக பாடுபட்டவர்களை கழக தலைவர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் தளபதி தொடர்ந்து அவர்களை பெருமைப்படுத்தி வருகிறார். இதனை இன்றைய இளைஞர்கள் குறிப்பாக பள்ளி மாணவ, மாணவிகள் கவையில் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியதாவது. முதல்வர்அவர்கள் சென்ற மாதம் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகள் பங்கேற்றார். முதல்வர் அவர்களது வருகை மாவட்ட மக்களை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது. சிறப்பாக நிகழ்ச்சி அமைய அயராது பணியாற்றியபெருமை கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களை சாரும். இதற்காக முதல்வர் அவர்கள் அமைச்சரை பாராட்டினார். முதல் வர் சுற்றுப்பயணத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் அமைத்த அதற்காக அயராது பணியாற்றிய கூட்டுறவுத்துறை அமைச்சர்அவர்களை மாவட்ட மக்களின் சார்பில் பாராட்டுகிறேன். குன்றக்குடி அடியார் அவர்கள் மனிதனாக மனிதன் வாழ வேண்டும் என்பதற்காக பல்வேறு பணிகளை செய்து வந்தார் . மடாதிபதிகள் மடத்திற்குள்ளே இல்லாமல் மக்கள் நல பணிகளை செய்ய வேண்டும் என்பதற்காக அடிகளார் அவர்கள் பல்வேறு மனித நேய செயல்களை செய்து வந்தார் . யாரும் செல்ல முடியாத சூழ்நிலையில் மண்டைக்காடு சம்பவத்திற்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். பலதரப்பு மக்களை சந்தித்து அமைதி ஏற்பட முயற்சி மேற்கொண்டார். அவரை பாராட்டி போற்றும் விதமாக கலைஞர் அவர்கள் மேலவை உறுப்பினராக நியமித்தார் . முதலில் அடிகளார் இதை ஏற்றுக் கொள்ள தயங்கினார். பின்னர் மேலவையில் பங்கேற்று மக்கள் நல பணிகளை மேற்கொள்ள விரும்பி மேலவை உறுப்பினர் பதவியை ஏற்றார். இந்தியாவிலேயே முதன்முறையாக மடாதிபதியை மேலவை உறுப்பினராக்கி பெருமைப்படுத்திய பெருமை பாராட்டு தலைவர் கலைஞரை சேரும் .அவர் எழுதிய நெஞ்சுக்கு நீதி இரண்டாம் பாகத்தில் அடிகளாரை பற்றி எழுதியுள்ளார். அதேபோல் அடிகளார் அவர்கள் மறைந்த பிறகு 1996 இல் அவருக்கு நினைவு மண்டபம் கட்டுவதற்கு உத்தரவிட்ட கலைஞர் அவர்கள் 2002ல் குன்றக்குடிக்கு வந்து மணி மண்டபத்தை திறந்து வைத்தார். இந்தியாவிலேயே துறவிக்கு மணிமண்டபம் முதலில் அமைத்த பெருமை கலைஞருக்கு உண்டு. மனிதநேயம் தழைக்க வேண்டும் என்று அடிகளார் அவர்கள் பாடுபட்டார்கள் . அதை மதித்து கலைஞர் அவர்களும் அடிகளாரை பாராட்டி வந்தார்கள் . பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த மடத்திற்கும் சென்றதில்லை. ஆனால் குன்றக்குடி மடத்திற்கு மட்டும் வந்துள்ளார் . அதற்கு அவர் சொன்ன காரணம் மனிதநேயத்துடன் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற வழியில் குன்றக்குடி மடம் செயல்பட்டு வருகின்றது .. சமயத்துடன் மக்களையும் இணைத்து பார்க்கிறது .எனவே அவர்கள் அழைத்து நான் செல்ல வேண்டும் என்பதில்லை. நானாகவே செல்லலாம் என்று தான் சென்று வந்தேன் என்று பெருமையுடன் கூறி பாராட்டினார் . அத்தகைய மனிதநேயத்தை வளர்த்தவர் நமது குன்றக்குடி அடிகளார் ஆவார்.அவரது வழியில் மனிதநேயத்துடன் இன்றும் குன்றக்குடி மடம் மக்களுடன் நெருங்கி பழகிவருகிறது. இன்றும் அவரது வழியில் நான் பணியாற்றி வருகிறேன். இவ்வாறு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் பேசினார்கள் .

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர்திருமதி ஆஷா அஜித் வாழ்த்துரை வழங்கினார் .வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம் நூலினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் வெளியிட டாக்டர் நா.சந்திரபாபு ஆசிரியர் சா .ராமன் மருத்துவர் அமலன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள். தமிழ் பண்பாட்டு மைய இயக்குனர் பேராசிரியர் சே .செந்தமிழ் பாவை நன்றி கூறினார். நிகழ்ச்சியினை முனைவர் தமிழ் முடியரசன், முனைவர் இரா. வனிதா ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் மேற்கு ஒன்றியம், கிரிசமுத்திரம் கிராமத்தில் நடைபெற்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான எருது விடும் நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு எருது விடும் நிகழ்ச்சியை கொடி அசைத்து துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், பொதுக்குழு உறுப்பினர் கோவிந்தம்மாள்பெருமாள், ஒன்றிய நிர்வாகிகள் சி.சிவகுமார், குமார், சங்கர், கணேசன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### இராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும்

# முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, பிப்.19-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடந்தது.

மாநில சுற்றுச்சூழலை துணைச் செயலாளர் வினோத் காந்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட துணை செயலாளர்கள் சிவானந்தம், துரைமஸ்தான், குமுதா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணை யன்,க.சுந்தரம், அ. அசோகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அவர் பேசியதாவது:

தமிழக முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்று 4வருடம் ஆகிறது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு திட்டத்தை முதல்வர் நிறைவேற்றி வருகிறார்.வரும் 2026ஆம்ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம்.

வருகிற1ந்தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவை ஆடம்பரம் இல்லாமல் மக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும்.

மாவட்டந்தோறும் கட்சி கொடியினை ஏற்றி வைத்து அன்னதானம்,

வழங்க வேண்டும். மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், முதியோர் இல்லம்,மனவளர்ச்சி குன்றிய பள்ளி போன்ற இடங்களில் உணவுகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். மருத்துவ முகாம், ரத்ததான முகாம்களை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாளை முன்னிட்டு கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் சீரிய வகையில் கொண்டாடும் விதமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் விளக்கும் பொதுக்கூட்டங்கள் நடத்துவது, கட்சி கொடியேற்றி இனிப்பு வழங்குவது, கண் தானம், ரத்ததானம், மாவட்டம் முழுவதும் ஊர் கிளை, வட்டங்கள் தோறும், ஒவ்வொரு நகர, ஒன்றிய, பேரூர், கழகத்தின் சார்பில் சிறப்பாக விழா நடத்துவது, அரசின் 4ஆண்டு சாதனைகள் குறித்து வீடு, வீடாகச் சென்று திண்ணை பிரச்சாரம் நடத்தி, வரும் சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதனோடு மறைமுக கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வை முழுமையாக வீழ்த்தி "வெல்வோம் 200படைப்போம் வரலாறு"என்கிற நம் தலைவர் தளபதி முகஸ்டாலின் எண்ணத்தை நிறைவேற்று வோம். தளபதி முகஸ்டாலின் பிறந்த நாள் முன்னிட்டு சனி, ஞாயிறு அன்று மருத்துவ முகாம் நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத், மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் இசட் அப்துல்லா மற்றும் மாவட்ட கழக, தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகர கழக, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### இன்று நடைபெறுகிறது!

# திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருப்பத்தூர், பிப்.19-

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் திருப்பத்தூர் S.R.K. கன்வென்சன் ஹாலில் இன்று (19.02.2025-புதன்கிழமை) காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது.



அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

பொருள் :

1. முதல்வர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் விழா.

2.கழக ஆக்கப் பணிகள்.

### மு.சண்முகம் எம்.பி. தலைமை! திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு எழுதிய

# "சுயமரியாதை இயக்க வரலாறு" - இரண்டு பாகங்கள் நூல் -கி.வீரமணி வெளியிடுகிறார்!

## ஆ.இராசா எம்.பி. - பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - டி.கே.எஸ்.இளங்கோவன் ஆய்வுரை!

சென்னை, பிப்.19-

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய "திராவிட இயக்க வரலாறு நூல்" (இரண்டு பாகங்கள்) திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பெற்றுக்கொள்கிறார். இந் நூல் வெளியீட்டு விழா, வருகிற 22 ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இது பற்றிய விவரம் வருமாறு :-

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய "சுயமரியாதை இயக்க வரலாறு" (இரண்டு பாகங்கள்) நூல் வெளியீட்டு விழா 22.2.2025 - சனிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகின்றது.

நூல் வெளியீட்டு விழாவிற்கு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தலைமை வகிக்கிறார்.

தொ.மு.ச. பேரவை தலைவர் கி.நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

நூலாசிரியர் - திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் நூல் அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

"சுயமரியாதை இயக்க வரலாறு" இரண்டு பாகங்கள் - நூலை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

நூலை பெற்றுக் கொண்டு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தி.மு. கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., திராவிடர் கழக பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துகின்றனர்.

திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் ச.பிரின்ஸ் என்.ஆர்.எஸ். பெரியார் இணைப்புரை நிகழ்த்துகிறார்.

நக்கீரன் பதிப்பகம் தி.சிற்றரசு நன்றி கூறுகிறார்.

# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகிற 21.2.2025 - வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2025

**அன்னியூர் சிவா,**
செயலாளர்,
தி.மு.க. விவசாயத்
தொழிலாளர் அணி.



திருப்பத்தூர் மாவட்டத்தில் 10 மேல்நிலைப் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு எழுது பொருள் உபகரணங்கள் தொகுப்பினை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. வழங்கினார்.